டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. குறைந்த பட்சம் 100 தறிகளை விசைத்தறிகளாக தற்போது மாற்றிக் கொடுத்தால் குறைந்தபட்சம் 100 பெண்களுக்கு நேரடியாகவும், 100 பெண்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்கு வசதி இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் 100 தறிகளை விசைத்தறிகளாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களாக உள்ளவர்கள் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் மனு தாக்கல் செய்வார்களேயானால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 308. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

308—

பரம்பிக்குளம்-ஆழியார் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்குதல்.

*817 டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரம்பிக்குளம—ஆழியார் அணையிலிருந்து Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்தி விவசாயத்திற்கு மட்டும் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்ட அணைகளிலிருந்து சிறப்பு நீர்விடுப்பு அதாவது Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கோ, சர்க்கரை ஆலைகளுக்கோ தண்ணீர் திறந்துவிடுவதில்லை. விவசாயத்திற்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன். இருக்கையில் இல்லை. திரு. வி. பி. சந்திரசேகர்.

1992 மார்ச் 23]

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்பெஷல் வாட்டர் ரிலீஸ் என்ற அடிப்படையிலே பயிர்களுக்கு உயிர் தண்ணீர் விடுகின்ற நேரத்திலே அப்படி விடுகின்ற தண்ணீர் ஆயக்கட்டுக்குட்பட்ட பகுதிகளிலே உள்ள பயிர்களுக்கு மட்டுமே பாய்ச்ச வேண்டும், அப்படியில்லாமல் அவர்களுடைய பலாத்காரத்தின் காரணமாக அதிகாரிகளை மிரட்டிவிட்டு ஆயக்கட்டிலே சேராத பயிர்களுக்குப் பாய்ச்சுகின்ற காரணத்தினாலே பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது, அப்படிப்பட்டவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே நம்முடைய அரசு இந்த நீர் விநியோகத்திலே எவ்வளவு முறையாக நடந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் அவர்கள் நன்றாக அறிவார்கள், அதற்குப் பின்னாலே முறையான நடவடிக்கை எடுத்து தண்ணீரை சிக்கனப்படுத்தியதன் காரணமாகத்தான் இன்றைக்கு அவருடைய தொகுதிக்குக்கூட தென்னை மரத்திற்கு உயிர் தண்ணீர் விடுகின்ற ஒரு நடவடிக்கையை பொதுப்பணித்துறை மேற்கொண்டு இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது கடமை என்று கருதுகிறேன், ஆகவே நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே முறையற்ற செயல்களிலே ஈடுபட்டு பாசன பரப்புள்ள நிலங்களை விட்டு வேறு நிலங்களுக்குப் பாய்ச்சுவதை இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது. அப்படி யாராவது நடவடிக்கையில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி,

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பரம்பிக்குளம்—ஆழியாறு புராஜெக்ட் பாசன திட்டத்தில் குறிப்பாக திருப்பூர் நகருக்கு தெற்கே கொங்குர் பகுதியிலிருந்து பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை சிலர் விவசாயம் செய்வதைவிட அதை விற்றுவிடுவதிலே லாபம் எனக்கருதி அதை லாரிகள் மூலமாக வியாபாரப் பொருளாக விற்றுவருகிறார்கள், அதனாலே பல விவசாயிகள் நேரடியாக விவசாயம் செய்கின்றவர்கள் பாதிக்கப் படுகிறார்கள், நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்படுகிறது, எனவே அப்படி முறையற்ற முறையிலே தண்ணீர் வியாபாரம் செய்யும் தனிப்

பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்குப் பதிலாக அரசே நேரடியாக திருப்பூரிலே ஒரு குளத்தைக் கட்டித் தேக்கி நேரடியாக விற்பதற்காவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ஏற்கெனவே கேட்டிருக்கின்றார்கள், இது சம்பந்தமாக பிரச்சினை வருகின்ற நேரத்திலே தனியார்கள் நிலங்களிலே இருக்கின்ற கிணறுகள் மூலம் அந்தத் தண்ணீரை சில இடங்களில் லாரிகளில் எடுத்துச்செல்வதாக எங்களுக்கு தகவல் தரப்பட்டுள்ளது, அதற்குப் பின்னாலே நம்முடைய அதிகாரிகள் வந்து பார்க்கின்ற நேரத்திலே அவர்கள் சொந்த நிலங்களிலே இருக்கின்ற கிணறுகளில் இருந்து எடுக்கின்றதை அரசால் தடுக்க இயலாது, ஆனால் நம்முடைய பாசன வாய்க்காலிலேயிருந்து தண்ணீர் எடுப்பார்களேயானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது, ஆகவே முறைகேடாக யார் பயன்படுத்தினாலும் அரசு நடவடிக்கை எடுக்கும், திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அந்நிய செலாவணி ஈட்டுகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த நகருக்கும் நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 309, திரு. கா, சின்னசாமி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309—

கொல்லிமலையிலுள்ள கிராமங்களுக்கு மின்வசதி,

*4181 திரு, கா, சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கொல்லி மலையில் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?